# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,923 — 1970 සැප්තැම්බර් 11 වැනි සිකුරාදා — 1970.9.11

14,923 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரததுடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 277 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 279 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 283 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூறுகள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விறபனைகள் .. .. .. | — |
| விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 291 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 (2) ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகத்து மீ 26 ந் உ.

#### கட்டளை

குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதேனியக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசமானது, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (2) ம் உட்பிரிவினது மூன்றாவது காப்புரையிற் குறிப்பிடப்பட்டுள்ள வக்கர் வரியை விதித்து அறவிடுவதற்கான ஒரு விசேட பிரதேசமாக இருத்தல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

9-328—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள வெள்ளவாயக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3)ம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உளநாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பி. சிரிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 28 ந் உ.

#### துணைவிதி

மலகூடக் கட்டணங்கள்

1. வெள்ளவாயக் கிராமச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகளின் 6 ம் பகுதியின் 11 ம் துணைவிதியின் நோக்கங்களுக்காக, சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படற்பாலதான மலகூடக் கட்டணம் சேவைசெய்யப்படும் மலகூடவாளி ஒவவொன்றுக்கும் ஒரு ரூபா வீதமாக இருத்தல் வேண்டும்.

9-519—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ஆவது பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

எப். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒகத்து மீ 27 ந உ.

### கட்டளை

1969 மே 30 ந் திகதிய 14,856 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட மொனறாகலைப் மாவட்டத்து வெள்ளவாயக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள புதிய கதிர்காமக் கிராமப் பிரதேசத்தை அமைப்பதையும் புத்தளைக் கிராமப் பிரதேசத்தை மாற்றுவதையும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதனோடுள்ள அட்டவணையில் குறித்துள்ள விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகிறது.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகள கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.

2. 1969 திசெம்பர் 31 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட சகல துணைவிதிகளும் இத்துணைவிதிகள் அப்புதிய கிராமப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொரு கிராமப் பிரதேசத்திலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டியதுடன் அவை அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படல வேண்டும்.

3. 1969 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலிருக்கும் பணத்தொகை 1970 சனவரி 1 ல் பிரசுரிக்கப்பட்டு நான்கில் ஒரு பாகமான பணத்தொகை கதிர்காமக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் நான்கில் மூன்றுபாகம் புத்தளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் வரவு வைக்கப்படல் வேண்டும்.

4. 1969 திசெம்பர் 31 ல் பழைய புத்தளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தரியிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த காணி, கட்டிடம் அல்லது வேறு நிலையான சொத்து ஒவ்வொன்றும் 1970 சனவரி 1 லிருந்து எப்புதிய கிராமப் பிரதேசத்துக்குள் அக்காணி, கட்டடம் அல்லது வேறு நிலையான சொத்து அமைந்திருக்கின்றனவோ அக்கிராமச் சபைக்கு உரிமையாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

5. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய உரிமைகள், கடன்கள் பொறுப்புகள், கடப்பாடுகள் ஆகிய யாவும் அவை புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்டவரையில் 1970 சனவரி 1 லிருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பணிமனையில் வைத்திருக்கப்பட்ட கோப்புகள், பதிவுகள், சாதனங்கள் அனைத்தும் அவை புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்ட வரையில் 1970 சனவரி 1 லிருந்து அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

7. 1969 திசெம்பர் 31 இல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பின்வரும் அசைவுள்ள சொத்துக்கள், 1970 சனவரி 1ல் புதிய கதிர்காமக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டுவதுடன் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த எஞ்சியுள்ள அசைவுள்ள சொத்துக்கள் புதிய புத்தளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படவும் வேண்டும்.

மூடிகளுடன் கூடிய புத்தக ருக்கை 1
பிக்காசு 1
கோடரி 1
மண்வெட்டிகள் 7
களஞ்சிய வாளி 1
மலகூடவண்டிகள் 2
ஒலிம்பியா சிங்களத் தட்டச்சுப் பொறி 1
அலவாங்கு 1
குப்பை வண்டில் 1
எழுதுமேசைகள் 2
ஒற்றைமாட்டுவண்டில் 1
கைபிடிக்கதிரைகள் 7
சிறிய கதிரைகள் 5
மேசை 1
கத்திகள் 2

8. பழைய கிராமச் சபையில் சேவை செய்திருக்கும் அதன் ஊழியர்களுக்குச் இளைப்பாற்றுச் சம்பளங்கள் வழங்குவதன்பேரிலான உதவு தொகைகள் சம்பந்தமான அச்சபையின் பொறுப்பு கதிர்காமம், புத்தளை ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிடையே 1 : 3 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

9. இந்த அட்டவணையில்—

" புதிய கிராமப் பிரதேசம் " என்பது வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி 1969 மே 30 ந் திகதி 14,856 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் அமைக்கப்பட்டவாறான கதிர்காமக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

" பழைய கிராமப் பிரதேசம் " என்பது புதிய கிராமப் பிரதேசங்களாக வருவதற்கு முன்பிருந்த புத்தளைக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

9–499—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ன் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சபையின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257), 17 (1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அன்ரனி அல்பிறற் ஜோசப், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் ஆகிய நான் இந்த அட்டவணையில் பத்தி 1 ல் குறிக்கப் பட்டுள்ள கிராமச் சபையின் முதற் கூட்டத்தை, அந்த அட்டவணையில் பத்தி 2 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையில் பத்தி 3 ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் பத்தி 4 ல் குறிக்கப்பட்ட இடத்தில் கூட்டுகின்றேன்.

அ. அ. ஜோசப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 4 ந உ.

### அட்டவணை

| பத்தி 1<br>கிராமச் சபையின் பெயர் | பத்தி 2<br>திகதி | பத்தி 3<br>நேரம் | பத்தி 4<br>இடம் |
|---|---|---|---|
| | | மு. ப. | |
| கட்டைவேலி | .. 19.9.70 | .. 10.00 | .. கிராமச் சபை காரியாலயம்,<br>கட்டைவேலி |

9-507—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச்சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (1) ஆம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, அம்பாரைப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அன்ரன் அல்பிறெட் ஆகிய நான் இதன் கீழுள்ள அட்டவணையில் முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கிராமச்சபையின் முதலாவது கூட்டத்தை, அந்த அட்டவணையில் இரண்டாம் பந்தியில் உள்ள ஏற்ற பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் மூன்றும் பந்தியில் ஏற்ற பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் நான்காம் பந்தியில் உள்ள பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

அன்ரன் அல்பிறெட்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
அம்பாரை பிரதேசம்.

உள்ளூராட்சி அமைச்சு,
சந்தை வீதி, கல்முனை,
1970 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 3 ந் உ.

அட்டவணை

| 1 ஆம் பந்தி கிராமச்சபையின் பெயர் | 2 ஆம் பந்தி திகதி | 3 ஆம் பந்தி நேரம் | 4 ஆம் பந்தி இடம் |
|---|---|---|---|
| அக்கரைப்பற்று மத்திய கி.ச. | 19.9.1970 | காலை 10.00 | அக்கரைப்பற்று மத்திய கிராமச் சபை காரியாலயம் |

9–483—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல 14,923

---

# பதவிகள் — வெற்றிடம்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

*படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.*

*2. சேவை நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும். உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.*

*3. நியமன விதிகள்.—(அ) 1952 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ந் திகதி வெளியான 10,432 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துச் சொல்லப்பட்ட பதவிகளும், அவற்றோடு காலத்திற்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு மாற்றப்படாத பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது, 1962 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றுச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியனவாகும்.*

*(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும்.*

*(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சி தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.*

*(ஈ) உள்ளூராட்சிச் சேவை இளைபாற்றுச் சம்பளத்திட்டத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்படாததாக அறிவிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் அப்பதவிகளுக்கு நியமனஞ் செய்யப்படுபவர்கள், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின், 18 ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை சகாய நிதிக்கு, தமது சம்பளத்தின் 5 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். அவர்கள் நியமிக்கப்படும் உள்ளூராட்சித் தாபனங்கள், அவர்கள் சார்பாக, அவர்களின் சம்பளத்தின் 7½ சத விகிதத்தை அந்நிதிக்குச் செலுத்தும்.*

*(உ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் தவிர 1952 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி வெளியான 10,329 ம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி ஸ்தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு கருதப்படும் தங்களது அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.*

*(ஊ) நியமிக்கப்படுபவர்கள். குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.*

*(எ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப் படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேகதகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின், வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.*

*(ஏ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றுண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றுண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.*

*(ஐ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.*

*(ஒ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.*

*4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி, சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.*

*(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக, 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும், அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.*

*(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.*

*(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில், அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள், க. பா. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.*

*(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்*

சார்த்தி சிங்களப் பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சம மான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத் தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந் தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோ கத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவை யாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதி லிருந்து விலக்கப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக் கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுர மாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தி யோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், 4 ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பத வியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந் தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக் கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல் வித்தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனு மதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.— இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள் ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதி யுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன் றில் கடமையாற்றுறுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணை யாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப் பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத் தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற் குத் தாம் தயாரா? இல்லையா? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதி யின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்ய லாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாக வேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமை யீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகை களிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயா ரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாள ருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெய ருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள் ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப் பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீர்சார்த்திகள் தாமாகவே வினைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறு விதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித் துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளு வதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செய லாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாச மிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்ய முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத் திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண் ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடைய வர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவ றாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கி லத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட் சைச் சான்றிதழ். (2) குணச் சான்றிதழ். (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ண்பக்காரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாக கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார் கள்.

..............................(......) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்த மானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) ........................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
   தேசிய இனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரை விலக்கணத்தின்படி இலங்கையரா? இலங்கையரல்லா தவரா? என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
   ————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்.
   (ஆ) பிறந்த திகதி :———வருடம் ———மாதம் ———திகதி

5. பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பக்காரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங் கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா? தனியாளரா? தாரமிழந்தவரா? அல்லது கைம்பெண்ணா? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .................... | ...... | ...... | 1 ....... | ...... | ...... |
| 2 .................... | ...... | ...... | 2 ....... | ...... | ...... |
| 3 .................... | ...... | ...... | 3 ....... | ...... | ...... |
| 4 .................... | ...... | ...... | 4 ....... | ...... | ...... |
| 5 .................... | ...... | ...... | 5 ....... | ...... | ...... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) ஆங்கிலம் :————.

(இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள் :——.

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி/ வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக.) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அநுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக.) :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத்தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களேதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

## உள்ளூராட்சிச் சேவை

### தரம் I, கைதேர்ந்த மினுக்குபவர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உ. ஆ. சே. அ. சபையினால் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் முதலில், கொழும்பு மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

3. **வேதனம்** : இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூ. 3,240—12 × 60—3,960. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்** : (அ) வயது : 25.9.1970 ல் விண்ணப்பதாரர்களுக்கு 45 வயதிற்கு மேற்படக்கூடாது. உ. ஆ. சேவையிலுள்ள அங்கத்தவர்களுக்கோ, சபைகளிலுள்ள ஊழியர்களுக்கோ, இவ்வயதெல்லை பொருந்தமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர்கள் இலங்கையராயிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள், பிரஞ்சு மினுக்கியாலும், (பிரெஞ்சு பொலிஷ்) மரத்தாலு அரக்கு முதலியவற்றாலும் (செலுலோஸ்வாக்கர்) தளபாடங்களை மினுக்குவதில் குறைந்தது 10 வருட அனுபவமாவது, ஒரு நன்கு மதிக்கப்பட்ட ஏதாபனத்தில் அல்லது நிலையத்தில் அல்லது மாநகரசபை வேலைக்கான அலுவலகத்தில், பெற்றிருத்தல் வேண்டும். பிரெஞ்சுப் பொலிஷ், செலுலாய்வாக்கர் என்பனவற்றைத் தயாரிக்கவும் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும். தச்சுவேலையில் நல்ல அறிவும், உள்ளூர் மரவகைகளை அடையாளம் காணக்கூடிய அறிவும், தச்சுவேலைக்கான கருவிகளை உபயோகிப்பதில் அறிவும் இருத்தல் மேலதிகத் தகைமையாக அமையும்.

5. இவ்வர்த்தமானியின் 4 ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்திற் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 25.9.70 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட இப்படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாகப் பின்வருபவை இடப்பட வேண்டும் :—

13. மினுக்கும் தொழிலில் பெற்ற அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் (மூலங்கள் அல்ல) இணைக்கப்படல் வேண்டும்).

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக் கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 4 ந் வ.

9-487—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## உள்ளூராட்சிச் சேவை

### கொழும்பு மாநகரசபை, மாநகர எந்திரியின் திணைக்களம், ரிப்பர் சாரதி பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—மேற்படி பதவிக்கான வேதனம் வருமாறு.— வருடாந்தம் ரூ. 3120—14 × 60 ரூ. 3,960–மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதங்களுக்கும் நிபந்தனைகட்கும் இணங்க ஒரு திருமணப்படி வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) வயது.—6.10.70 ல் 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வருபவை விண்ணப்பதாரர்களிடம் இருக்க வேண்டும்

(1) மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட மோட்டார் லொறிகளை ஓட்டத்தகுதியுடையவர் என்ற சான்றிதழ்.

(2) லொறிச்சாரதிகளுக்கான தகுதிச்சான்றிதழ் பெற்ற பின் 3 வருடங்களுக்குக் குறையாமல் மோட்டார் லொறியை ஓட்டும் அனுபவம்.

(3) ரிப்பர் ஓட்டுவதில் அனுபவம். (மேற்சொன்னவற்றிற்கு அத்தாட்சியாக சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.)

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற் கண்டவாறு, விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 6.10.70 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். அப்படிவத்திலுள்ள 7 வது பந்தி பின்வருமாறு திருத்தப்பட்டு வாசிக்கப்பட வேண்டும்.—

"7 தொழில் நுட்பத் தகைமைகள்.—

(அ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் மோட்டார் லொறிகளை ஓட்டுவதற்குத் தகுதியுடையவர் என்று விநியோகிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ளீர்களா ?

(ஆ) ரிப்பர்களை ஓட்டுவதில் பெற்ற அனுபவம் பற்றிய முழு விபரங்கள்.

6. விதிக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படாத விண்ணப்பங்களும், மேலுள்ள விடயம் 3 ல் கூறப்பட்ட தஸ்தாவேஜுகளுடனும் சேர்த்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இடமாற்றத்தக்கவராவர்.

8. அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் விதந்துரைக்கப்பட்ட திகதிக்குப் பின் இவ்வலுவலகத்தில் கிடைத்தால், அவ்விண்ணப்பங்களைத் திணைக்களத்துத் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர்/உள்ளூராட்சி மன்றத் தலைவர், முடிவு திகதியின் முன் கிடைத்தன என்றும், தாமதத்திற்குரிய தாக்கமான காரணங்களைக் காட்டி சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. எந்தவிதத்திலும் ஆதாவு நாடினால், விண்ணப்பதாரர்கள் தகைமையிழப்பவராவர்.

10. விண்ணப்பங்களும் அல்லது தொடர்புடைய ஏனைய கடிதத் தொடர்புகளும், கொழும்பு த. பெ. 530, உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

11. தகுதியுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

செயலாளர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530,
கொழும்பு–1,
1970 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 3 ந் வ.

9–488—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல, 14,923

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### லொறி/ட்ராக்டர் சாரதி பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் லொறி அல்லது ட்ராக்டர் அல்லது இரண்டையும் ஓட்டவேண்டும்.

2. **வேதன அடிப்படை.**—வருடாந்தம் ரூபா 3,120 ஆரம்ப வேதனமாகக் கொண்டு வருடாந்தம் ரூபா 60 ஆக 14 வேதனப் பெருக்குடன் வருடாந்தம் ரூபா 3,960 ஆக உயரும். மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதங்களுக்கு நிபந்தனைகளுக்கு மிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—(1) வயது 6.10.70 இல் 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும். (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).

(2) பின்வருவனவற்றை விண்ணப்பதாரர்கள் உடைமையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மோட்டார் லொறிகளை ஓட்டுதற்கு, மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து 6.10.65 க்கு முன் பெற்ற தகைமைச் சான்றிதழும், நற்பதிவுகளும் இருத்தல் வேண்டும்.

(ஆ) தகைமைச்சான்றிதழ் பெற்ற பின் லொறிச்சாரதியாக 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ட்ராக்டர்களை ஓட்டுதற்கு, மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து தகைமைச்சான்றிதழும், நற்பதிவுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) ட்ராக்டர்களை ஓட்டுவதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) மோட்டார் இயந்திர நுணுக்கம் பற்றிய விரிவான அறிவு இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட (ஆ), (ஈ), (உ) ஆகியவற்றிற்கு அத்தாட்சியாகவுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

4. வயது எவ்வாறிருப்பினும், பதவிக்கான ஏனைய தகைமைகள் இருப்பின், உள்ளூராட்சி மன்றத்தின் சேவையிலுள்ள நிரந்தர பதவிகள் வகிப்போரிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள், இவ்வர்த்தமானியில் 4 வது பகுதியில் பிரசுரமாகியுள்ளது. அவற்றைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்திற் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 6.10.70 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்படும் இப்படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாக பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

"13. முழு விபரங்களையும் தருக :—

(அ) மோட்டார் லொறிகளை ஓட்டுவதற்காக உத்தரவுச் சீட்டு பெற்ற திகதி ;

(ஆ) உத்தரவுச் சீட்டின் இலக்கம் ;

(இ) உத்தரவுச் சீட்டு பெற்றபின், பெறப்பட்ட அனுபவ வருடங்கள், லொறிச் சாரதியாகவும், ட்ராக்டர் சாரதியாகவும் ஊழியஞ் செய்தது பற்றிய விபரங்கள் (சான்றிதழ்ப் பிரதிகள் அத்தாட்சியாக இருக்க வேண்டும்.

(ஈ) உத்தரவுச்சீட்டில் உள்ள புறக்குறிப்புகளும், அவற்றின் தன்மையும் ;

(உ) மோட்டார் எந்திரத் தொழில் நுட்பமும், செப்பனிடுதல் பற்றியும் உள்ள அறிவு உண்டா ?

(ஊ) ட்ராக்டர்களை ஓட்டுதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் தகைமைச் சான்றிதழ் பெற்றிருக்கின்றீரா ? (சான்றிதழ்ப் பிரதிகள் அத்தாட்சியாக அனுப்பப்பட வேண்டும்).

7. விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் இல்லாதவையும் பின்வரும் தஸ்தாவேஜுகள் சேர்க்கப்படாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(1) மோட்டார் லொறிகளை ஓட்டுவதற்கு உத்தரவுச்சீட்டு பெற்ற பின் 5 வருடத்துக்குக் குறையாத அனுபவம் உண்டு எனபதற்கு அத்தாட்சியாகவும் சான்றிதழ்ப் பிரதிகள்.

(2) மோட்டார் எந்திரத் தொழில் நுட்ப அறிவு பற்றிய சான்றிதழ்.

(3) ட்ராக்டர்களை ஓட்டுவதற்கான ஆற்றல் சம்பந்தமான சான்றிதழ்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தீவின் எந்தப்பாகத்திலும் சேவை செய்யவேண்டும். நற்பண்பு, நல்ல உடற்கட்டு, நற்சௌக்கியம் ஆகியவை அவர்களிடத்தில் இருக்க வேண்டும்.

9. நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் உள்ளூராட்சி மன்ற எல்லைகளுக்குள் வசிக்க வேண்டும். அவர்கள் இடமாற்றப்படத்தக்கவராவர்.

10. அரசாங்க சேவை அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களை விதந்துரைக்கப்பட்ட திகதிகுப் பின் இவ்வலுவலகத்தில் கிடைத்தால், அவ் விண்ணப்பங்கள், திணைக்களத்துத் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர்/உள்ளூராட்சி மன்றத் தலைவர், முடிவு திகதியின் முன் கிடைத்தன என்றும், தாமதத்திற்குரிய தாக்கமான காரணங்களைக் காட்டி சிபார்சு செய்தலானிறி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

11. எந்தவிதத்திலும் ஆதரவு நாடினால், விண்ணப்பதாரர்கள் தகைமையிழப்பவராவர்.

12. விண்ணப்பங்களும் அல்லது தொடர்புடைய ஏனைய கடிதத் தொடர்புகளும், கொழும்பு, த. பெ. 530, உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

13. தகுதியுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களுக்கு மாத்திரமே கிடைத்தமை பற்றி அறியத்தரப்படும்.

செயலாளர்,
உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு 1,
3.9.1970.

9-489—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

# துணை விதிகள்

## நாவலப்பிட்டி நகர சபை

### நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153(1)ம் பிரிவின் கீழ் நாவலப்பிட்டி நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஓகஸ்ட் மீ 26 ந் வ.

### துணைவிதி

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130(ஆ) ஆகிய பிரிவின் கீழ் நாவலப்பிட்டி நகர சபையினுல் விதிக்கப்பட்டு 1970 பெப்ருவரி 20 இன் 14,894 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 பெப்ருவரி 8 ந் திகதியைக் கொண்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 1970 ம் ஆண்டுக்குரிய விசேட மலகூடவரியிலிருந்து இதனகத்திருக்கும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனைத்தலங்கள விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

#### அட்டவணை

கொத்மலை வீதி இல. 22, 93.
சொயிசாக்கொலை வீதி இல. 2.
கோவில் டெரஸ் இல. 8.
3 ம் ஒழுங்கை இல. 4.
அம்பசமுவை வீதி இல. 25, 27, 163/2.

9-491—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் கொழும்பு மாவட்டத்திலுள்ள வாகைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஆகஸ்ட் மீ 26 ந் வ.

### சந்தைகளும் முறைச் சந்தைகளும் சம்பந்தமான துணைவிதி

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள வாகைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தைகளும் முறைச் சந்தைகளும் சம்பந்தமான நியமத் துணைவிதிகளின் 27 ம் பாகத்தின் 1 ம் துணைவிதியின் நோக்கத்துக்கு கிரிந்திவெலைச் சந்தைக்கான சந்தைப் பிரதேசம் சந்தையிலிருந்து ஒரு மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துள் அடங்கிய பிரதேசமாதல் வேண்டும்.

2. (1) சபையினுல் நிறுவப்பட்ட எந்தக் கிராமச் சந்தையிலும் உள்ள கடை, ஆசனம் அல்லது இடம் எதனையும் உபயோகிக்கும் அல்லது அதில் குடியிருக்கும் ஒவ்வொரு நபரும் அவ்வாறு உபயோகிப்பதற்கு அல்லது குடியிருப்பதற்கு இதனுடனுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின் பிரகாரம் ஒரு கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதிகளில்—
"சபை" என்பது கொழும்பு மாவட்டத்திலுள்ள வாகைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப்பொருள்படும்.

#### அட்டவணை

| | நாளொன்றுக்கு ஆன கட்டணம் ரூ. | ச |
|---|---|---|
| 1. சந்தைக் கட்டிடத்துக்குள் 75 சதுர அடிக்கு மேற் படாத கடை, ஆசனம் அல்லது இடம் ஒன்றுக்கு .. | 0 | 65 |
| 2. சந்தை மனைத்தலத்திலுள்ள கடையொன்றுக்கு அவ்வாறான கடையின் பரப்பு— | | |
| (அ) 50 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 | 45 |
| (ஆ) 50 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 75 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. | 0 | 65 |
| (இ) 75 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாவிடத்து .. .. | 0 | 80 |
| 3. திறந்தவெளியிலுள்ள ஆசனம் அல்லது இடம் ஒன்றுக்கு அவ்வாறான ஆசனம் அல்லது இடத்தின் பரப்பு | | |
| (அ) 9 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 | 10 |
| (ஆ) 9 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 | 20 |
| (இ) 25 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 | 40 |
| (ஈ) 50 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 0 | 60 |

9-492—11.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,923

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் குருநாகல் மாவட்டத்திலுள்ள தாரணைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பி. சிரிவர்த்தனா,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ௵ ஆகஸ்ட் ௴ 28 ந் ௳.

### துணைவிதி

பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

1. வாயுப்பானம் உற்பத்தி செய்தல்
2. இயந்திரம் கொண்டு எண்ணெய பிழிதல்
3. செம்பாறுங்கல், கிரவல் அல்லது கல்தோண்டுதல்
4. வைக்கோல் சேகரித்து வைத்தல்
5. தும்பு உற்பத்தி செய்தல் அலலது சேகரித்து வைத்தல்
6. கொல்லுலையொன்று வைத்தல்
7. மரக்காலையொன்று வைத்தல்
8. ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்
9. அச்சகம் ஒன்று வைத்தல்
10. சைக்கிள் திருத்தும் கடையொன்று வைத்தல்
11. மோட்டார் வாகனங்கள் திருத்தும் தலமொன்று வைத்தல்
12. தச்சுவேலைத்தலமொன்று வைத்தல்
13. செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல்
14. டயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்று வைத்தல்
15. கரி சேகரித்து வைத்தல்
16. அரிசி ஆலை அல்லது குத்துயந்திரமொன்று வைத்தல்
17. இயந்திரத்தினால் மிளகாய் அல்லது கறிச்சரக்குகள் அரைத்தல்
18. இயந்திரத்தினால் கோதுமை, குரக்கன் அல்லது வேறு தானியம் அரைத்தல்
19. ஒளிப்படக்கலைக்கூடமொன்று வைத்தல்
20. வெற்றுச் சாக்குகள் சேகரித்து வைத்தல்
21. ஒட்சி-வெல்டிங்கினால் செய்யப்படும் கம்மாலை எதுவும்
22. கொப்பரா உற்பத்தி செய்தல்
23. முருகைக்கல் அகழ்தற்குக் குழிதோண்டுதல்
24. இயந்திரத்தினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்
25. செக்கினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்
26. கொப்பரா சேகரித்து வைத்தல்
27. எண்ணெய் அல்லது ஏனைய எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சக்தியால் இயக்கப்படும் எந்திரம் உபயோகிக்கப்படும் ஏதாவது ஒரு தொழில்
28. பருத்திப்பஞ்சு அல்லது இலவம் பஞ்சு சேகரித்து வைத்தல்
29. ஒக்சிஜன் உபயோகிக்கப்படும் வாகனசாலையொன்றுவைத்தல்
30. நார் உற்பத்தி செய்தலும் சேகரித்து வைத்தலும்
31. தளபாடங்கள் உற்பத்தி செய்தல்
32. மண்ணெண்ணெய்க் குதமொன்று வைத்தல்
33. தேங்காய் துருவல் உற்பத்தி செய்தல்
34. தும்பு ஆலையொன்று வைத்தல்
35. அரிசி ஆலையொன்று வைத்தல்
36. புல்லெண்ணெய் அல்லது கருவாத்தைலம் உற்பத்தி செய்தல்
37. நெருப்புப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்
38. மரமரியும் ஆலை அல்லது கிடங்கு ஒன்றை வைத்தல்
39. ஒட்சி-வெல்டிங் செய்தல்
40. காரீயம் பதப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்தல்

